**03.03.2026**

அ.வ.எண். 249/2012

<u>பி.சா.3 அமுதவள்ளி குறுக்கு விசாரணை</u>

1. வாதிகள் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் என்னுடைய சொத்தை அவர்களுடைய சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். என்னுடைய சொத்தின் சர்வெ எண் என்னவென்றால் 46 ஆகும். சர்வே எண்.46ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 92 சதுரடி ஆகும். வாதிகள் தாத்தா பெயர் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. வாதிகளின் தாத்தா பெயர் மாரி என்றால் எனக்கு தெரியாது. மாரி என்பவருக்கு ஆதிமூலம் என்பவர் மகன் ஆவார். வாதிகள் பற்றி தெரியுமா என்றால் தெரியும்.

2. 1 முதல் 3 வாதிகளின் அப்பா பெயர் முனுசாமி என்றால் சரிதான். முனுசாமியின் உடன்பிறந்த சகோதரர் ராமசந்திரன் என்றால் சரிதான். ராமசந்திரன் என்பவரின் வாரிசுகள் 6 முதல் 9 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் கிருஷ்ணன் என்பவர் கலைமணி என்பவருக்கு கிரையம் கொடுத்ததாக கூறியுள்ளேன் அந்த சொத்தின் சர்வெ எண் என்னவென்றால் சர்வெ எண்.46 ஆகும், அதன் விஸ்தீரணம் எனக்கு ஞாபகமில்லை. தாவாசொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது பாட்டி அமிர்தம்மாள் பெயரில் உள்ளது. எனது பாட்டி அமிர்தம்மாள் பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். 1 முதல் 3 வாதிகளின்

தகப்பனார் முனுசாமி தாவாசொத்தில் வசித்து வந்தார் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாவாசொத்தை அனுபவித்து வந்ததற்கு வருவாய் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. அவ்வாறு எந்த வருவாய் ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாசொத்தின் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் 1 முதல் 3 வாதிகளின் தகப்பனார் மற்றும் தாத்தா பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. நான் தற்போது தாவாசொத்தில் வசித்து வருகிறேனா என்றால் ஆமாம். நான் தாவாசொத்தில் குடியிருப்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் மற்றும் என்னை வருவாய் துறை அலுவலகத்தில் தாவாசொத்து சம்பந்தமாக விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

4. எனது பிரமாணவாக்குமூலத்தில் கிருஷ்ணன் கலைமணிக்கு கிரையம் கொடுத்த ஆவணத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் அவர்கள் வைத்துள்ளார்கள், நான் கேள்விபட்டேன். அந்த பத்திரத்தை பார்த்தால்தான் எந்த சர்வே எண் மற்றும் எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரிய வரும் என்றால் சரிதான். 3ம் மற்றும் 4ம் பிரதிவாதி தாவாசொத்தில் குடியிருக்கவில்லை, வேறு ஒரு இடத்தில் குடியிருந்து

வருகிறார்கள் என்றால் சரியல்ல, தாவாசொத்தில்தான் குடியிருந்து வருகிறார். 1 முதல் 3 வாதிகள் தாவா சொத்திற்கு அவர்கள் முன்னோர் பெயரில்தான் பட்டா பாஸ்புக் உள்ளது என்று கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். தாவாசொத்து எனக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கும் மற்றும் எனது முன்னோர்களுக்கும் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வாதிகள் சொத்தை நாங்கள் அபகரித்ததால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனவே வாதிகள் கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.